பின்னால், முன்னால் அதை வைத்து இருந்தவர்களிடம் திருப்பி ஒப்படைப்பது வழக்கமாக இருக்கிறது. இது வாடிகையான ஒன்று தான். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நேரிலும் சொல்லியிருக்கிறார்கள், இப்போதும் கேட்டிருக்கிறார்கள். இது 20-9-1981 நோடு நலிவுற்ற நிறுவனமாக இருக்கக்கூடிய அந்த காலவரம்பு முடிவடைகிறது. தொழிலாளர்களிடமிருந்து ரெப்ரஸென்டேஷன் என்னிடம் வந்ததாகத் தகவல் இல்லை. அப்படி வருமானால் அதன் மெரிட்டின் அடிப்படையில் இந்தப் பிரச்னை பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 963 முதல் 966 வரை மாண்புமிகு ஆதித்திரார்விடர் நலத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பெறுகின்றன.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

### (அ) தி.மு.க. உறுப்பினர்கள் அவைக்கு வராதது.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாமன்றத்தின் பிரதான எதிர்க்கட்சியாக இருந்து வரும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் இன்றைக்கு இந்த மாமன்றத்தின் நடவடிக்கைகளில் பங்கு கொள்ள வரவில்லை. அது சம்பந்தமாக பேரவைத் தலைவர் அவர்களுக்கு ஏதாவது எழுதி இருக்கிறார்களா? பேரவைத் தலைவர் அவர்கள் அவர்களோடு சேர்ந்து பேசி ஒரு சுமுகமான நிலையை உருவாக்கி அவர்கள் நாளை முதலாவது இம் மாமன்றத்தின் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வார்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள். அதுபற்றி விவ திப்பதற்காக எல்லாக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தை நான் இன்று 12 மணிக்குக் கூட்ட இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு ஏ. சாகுல் ஹமீது: தலைவரவர்களே, பிரதான எதிர்கட்சி இல்லாத நிலையில் இந்த அவையை நடத்திச் செல்வது ஜனநாயக ரீதியில் முறையாக இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இத்தனை எதிர்கட்சிகள் இருக்கும் பொழுது, நீங்களும் இருக்கும் பொழுது சபையை நடத்தலாம். மாண்புமிகு சாகுல் ஹமீது அவர்களுக்குச் சொல்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு கடிதத்தை

எழுதியிருக்கிறார்கள். அதைப்பற்றி நான் எல்லா கட்சித் தலைவர்களையும் கூப்பிட்டிருக்கிறேன். ஏனென்றால் கடிதமோ, கடிதத்திற்கு பதிலோ சபாநாயகர் உறுப்பினர்களுக்கு எழுதுவது முறையும் அல்ல, மரபும் அல்ல. ஆகவே, எல்லாக் கட்சித் தலைவர்களையும் அழைத்து அவர்களுடைய கருத்துக்களை அறிந்து அதற்கேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, ஸ்ட்ராங் அப்ஜெக்ஷன். எங்கள் கட்சியினுடைய அப்ஜெக்ஷனைப் பற்றி நான் ரெக்கார்டு பண்ணுவதற்கு . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எதிர்க்கலாம்; அது வேறு விவகாரம்.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவரவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் உட்காரவேண்டும். இதில் பாயிண்ட் ஆப் ஆர்டர் கிடையாது. என்னுடைய அறைக்கு வந்து தெரிவியுங்கள்.

(ஆ) தமிழ்நாடு நிலச் சீர்திருத்தச் சட்டத்தை மையஅரசு திருப்பியது.

திரு. ப. நெடுமாறன்: பாயின்ட் ஆப் ஆர்டர். தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு குடியரசுத் தலைவர் அவர்கள் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்ட தமிழ்நாடு நிலச் சீர்திருத்தச் சட்டம் திருப்பி அனுப்பப்பட்டிருப்பதாக பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது. அதைப் பற்றி அரசாங்கத்தின் கருத்தை இந்த அவை அறிய விரும்புகிறது, அது பற்றி ஒரு அறிக்கையை அரசாங்கம் வைக்க முன்வருமா?

[முற்பகல் 9-30]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு விவர அறிக்கை தேவையில்லை என்று இப்போது கருதுகிறேன். ஆனால், இங்கே திருப்பி அனுப்பப்பட்ட மசோதாவிலே சில விளக்கங்களைக் கேட்டு, சில நாட்களுக்கு முன், மத்தியப் பேரரசிடமிருந்து கடிதம் வந்தது. அதைப் பற்றி சட்டத் துறையும் வருவாய்த் துறையும் ஆராய்ந்து. அவர்களுடைய விளக்கங்களுக்கு எல்லாம் பதிலைத் தயார்செய்து சம்பந்தப்பட்ட சட்ட அமைச்சரும், வருவாய்த்துறை